மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Bhakti Norma of Periyalvar

Dr. E. Pachaiyappan

Assistant Professor, Department of Tamil, School of Languages, Vels Institute of Science, Technology and Advanced Studies (VISTAS), Chennai, India

Manuscript ID : **MT127A0095**
Volume : **2**
Issue : **4**
Month : **December**
Year : **2022**
Received: 21.10.2022
Revised: 05.11.2022
Accepted: 19.11.2022
Published: 01.12.2022
Pages : 209-217
DOI: 10.5281/zenodo.7375284

ABSTRACT:

Thirumal worship which existed during the Sangam period, During the Alvargal Following the Vainava norms, they will excel in devotion and will enlighten those who are deeply rooted. Thus the year of the Holy Sepulcher of Periyalvar can be seen in his hymns showing the devotion to Tirumala through the hymns, the method of worshiping the Lord through that hymn, the benefits of worshiping Tirumala and the daily worship of Tirumala which is the cause of worldly movement and the benefit of this birth.

KEYWORDS:

Bhakti, Enlightenment, Siva Norm, Karumayogam, Gnanayogam, Bhaktiyogam, Prabhatiyogam, Karmayogam, Gnanayogam, Raja Yoga, Fasting, Penance, Meditation, Pranayamam, Duvaitam, Attuvaitam, Visishtavathu

பெரியாழ்வாரின் பக்திநெறி

முனைவர் எ. பச்சையப்பன்,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, மொழிகள் புலம்
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

சங்க காலத்திலேயே சிறந்திருந்த திருமால் வழிபாடு, பல்லவர்கள் காலத்தில் மேலும் வலுப்பெற்றது. பல்லவர்கள் காலத்தில் வைணவநெறியைப் பின்பற்றித் திருமாலைத் தொழுது பக்தியில் சிறந்தவர்களாகவும், ஆழமாக வேரூன்றியவர்களாகவும் திகழ்பவர்கள் ஆழ்வார்கள் ஆவர். பன்னிரு ஆழ்வார்களுள் குறிப்பிடத்தகுந்தவர் பெரியாழ்வார். பெரியாழ்வாரின் பாசுரங்கள் மூலம் திருமால் மீது கொண்ட பக்தியையும், அந்தப் பாசுரத்தின் மூலம் இறைவனை வழிபடும் முறையையும், திருமாலை வழிபடுவதால் ஏற்படும் பலன்களையும், திருமாலைத் தினமும் வழிபடுவதையும் அறியலாம். உலக இயக்கத்தையும் இப்பிறவியின் பயனையும் அறிய பெரியாழ்வார் பாசுரங்கள் துணைபுரிகின்றன.

கருச்சொற்கள்

பக்தி, ஞானம், சிவ நெறி, கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தியோகம், கர்மயோகம், ஞானயோகம், ராஜயோகம், விரதம், தவம், தியானம், பிராணாயாமம், துவைதம், அத்துவைதம், விசிஷ்டாத்வைதம்

முன்னுரை

பக்தி எனும் சொல் தமிழகத்தைப் பொறுத்தவரை இலக்கியத்தின் மூலமாக விளக்கப் பெறுகின்றது. பக்தி எனும் சொல் வடமொழியில் அமைவது. இதன் பொருள் ஆர்வம் எனும் சொல்லுடன் ஒத்தமைவது எனக் காட்டுவர். இப்பக்தி எனும் சொல்லைச் சைவக் குரவர்களும், ஆழ்வார்களும் எடுத்தாளுகின்றனர். பக்தி இலக்கியம் ஒரு தனி உலகம். இதில்தான் எண்ணிலடங்கா ஞானிகளும் யோகிகளும் சித்தர்களும் அருளாளர்களும் தோன்றி மண் நிறைந்த இந்த பூமியைப் புண்ணிய பூமியாய்ப் புனித பூமியாய் மாற்றி இருக்கின்றார்கள்.

பக்தி

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியம் எனும் சிறப்பான காலகட்டம் அமைந்துள்ளமையால் பக்தி எனும் சொல்லின் சிறப்பு இவ்விலக்கியங்களின் வழி உரைக்கப் பெறுகின்றது. இறையுணர்வால் உந்தப்பெற்ற சான்றோர்களின் வாயிலாகப்

பக்தியை உணர வேண்டியுள்ளது. பக்தியாகிய இறையுணர்வு சங்க காலம் முதல் பாக்களின் வழி வெளிப்பட்டு வந்துள்ளது. இறைவனிடம் கொண்ட ஈடுபாட்டால் பக்தி இலக்கியங்கள் உதித்தன. இவ்வாறு அமையும் பக்திப் பாக்கள் அருள் பெறுதலுக்காகப் பாடுதலும் அருள் பெற்றபோது பாடுதலும் என இருவகையாக அமைந்துள்ளன. "பத்தா பத்தர்களுக்கு அருள் செய்யும் பரம்பரனே"[1] என அமையும் தொடரினைக் கொண்டு அதனை அறியலாம்.

பக்தியும் இறைஞானமும்

பக்திக்கு அடிப்படையாக அமைவது ஞானம் எனக் கொள்ளலாம். இறைஞானத்தால் வரும் தெளிவு சீவனுக்கு வழிகாட்ட அது பக்தியாக மலர்கிறது. ஞானம் எனின் அது இங்கு இறைஞானத்தை குறிக்கும். ஞானத்தை அறிவினால் விசாரித்து தெளிவதாகவும், பக்தியை உணர்ச்சியினால் ஒன்றுவதாகவும் விளக்க முயல்வர். இவ்வடிப்படையில் 'அன்புநெறி அறிவுநெறி' இரண்டென்பர். சமயச்சான்றோரின் கூற்றுகள்படி நோக்கின் அவை உணர்ச்சி அடிப்படையில் அமைந்தவை என்று மட்டும் கொள்வதற்கில்லை. அவற்றை நோக்க பக்தியும் ஞானமும் கலந்த கலப்பே என்பது விளங்கும். ஞானம் என்பது ஒரு பொருளைப் பற்றி நன்கு தெரிந்து வைத்திருத்தல் என்பதாகும். இறைவனைப் பற்றிய அறிவினைத் தெளிவாய் உணர்ந்து அவனை வழிபட்டாரைப் பக்தர் என்றும், அடியார் என்றும், தொண்டர் என்றும் உரைக்கின்றனர். அதனால் ஞானத்தின் பயன் பக்தியாகிறது.

> **"ஞானம் என்ன என்பதைக் கண்ணன் பகவத் கீதையில்**
> **கூறுகின்றான். வேறு எதையும் எண்ணாத யோகத்தால்**
> **என்னிடம் பிறழாத பக்தி பண்ணுதல் தனி இடத்தை நாடுதல்**
> **இலக்கட்டத்தில் விருப்பமின்மை"** **(பகவத் கீதை. அக்.**13 **சுலோகம்.** 9)

எனும் அவன் கூற்றில் பக்தியும், ஞானத்திற்கான வழியாகக் கூறப் பெறுகின்றது. பக்தி முதிர்வதே ஞானமும், ஞானத்திற்கு அடையாளமாகவும் அமையும். பக்தி வளர்ந்து முக்தி பெற்று உள்ளத்தில் அது தெளிவும் உறுதியும் தருகின்றது. காற்றில்லாத இடத்தில் நிற்கும் புகை போல மனதுள் நிறைந்து அசைதல் இல்லாததாய் அமையும் உணர்வே ஞானமாகும். அது பக்தியின் பயன்பாட்டால் அமைவது. பக்தி, ஞானம் இரண்டும் ஒன்றிற் கொன்று பிரித்துக்காண இயலாததாய் அமைகிறது.

இறைவனின் திருவருள் கிட்டுவதற்குச் சான்றோர்கள் பக்தியை ஒரு வழியாகக் கையாண்டனர். கண்ணனும் தம்மை அடைய கூறுகின்ற அறிவைப் பக்தியாகவும் கொள்கின்றான், பக்தியைப் பெற்றவர்கள் ஞானிகள் எனப்படுவர், அப்பக்தியாகிய ஞானத்தால் இறைவனைத் தொழுததை,

"ஞானத் தால்தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாய்உனை நானும் தொழுவனே"[2]

என்று கூறுகின்றார் அப்பர். அத்தகைய சிறப்புடைய பக்தியை எளிமையாக்கி யாவரும் இறையருள் அடையும்படிச் செய்த பெருமை ஆழ்வார்களுக்கும் சைவக் குரவர்களுக்குமுரியது.

"உயர்வற உயர்நலம் உடையவன் யவன் அவன்
மயர்வற மதிநலம் அருளினவன் யவன் அவன்
அயர்வறும் அமரர்கள் அதிபதி யவன் அவன்
துயரறு சுடரடி தொழுது எழுஎன் மனனே"[3]

என நம்மாழ்வார் ஞானத்தால் பக்தியைப் பெற்றதைக் கூறுவார்.

பக்தி மார்க்கம்

சைவ, வைணவ பக்தி மார்க்கம் இரண்டும் தத்தமக்குரிய பக்தி செய்யும் முறைகளைப் பகுத்துரைக்கின்றன. அவைகள் சைவம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்றும் வைணவம் கருமயோகம், ஞானயோகம், பக்தியோகம், பிரபத்தியோகம், ஆச்சாரிய அபிமானம் என்றும் நெறிகள் மாறுபட்டமையினும் அவற்றின் பொதுப் பொருள் இறைவனைச் சரணடைதல் என்பதே. நெறிகள் வேறாகக் கொள்ளப் பெறினும் பக்தியின் நோக்கம் அடிப்படை இரண்டும் ஒன்றுதான் என்பது இதனால் விளங்கும்.

பக்தி நெறியின் சிறப்பு

கடவுளை அடைதலே வாழ்வின் முடிவான குறிக்கோள் இதனைப் பொருளாகக் கொண்டதே சமயச்சான்றோரின் வாழ்க்கை. மனிதன் கடவுளை அறிந்துமிருக்கலாம்; அறியாதுமிருக்கலாம். அவன் அறியாமல் அதுவே அவனுக்குக் குறிக்கோளாய் இருக்கிறது. இதையே அவர்கள் விளக்குகின்றனர். கடவுளை அடைவதற்குப் பக்தி நெறி எல்லாவற்றிலும் மிக எளிதாக இருக்கிறது. மனிதனுடைய இயல்பிற்கு இது ஒத்ததாக அமைகிறது. பக்திக்குரிய சிறப்புகளில் இது மிக முக்கியமானதாக அமைகிறது.

தூய பக்தி, கர்மம், ஞானம், யோகம் எனும் இவற்றைவிட மேன்மையானது. இந்நெறிகளைக் கையாளுகின்றவர்கள் பக்தியோகி, ஞானயோகி, கர்மயோகி, ராஜயோகி எனப்பெயர் பெறுவர். கர்மயோகம், ஞானயோகம், ராஜயோகம் என்னும் மூன்றும் பரிபூரண நிலையை அடைவதைக் குறியாகக் கொண்டிருக்கின்றன. கர்மயோகம், ஞானயோகம், ராஜயோகம் முதலிய மூன்றும் பக்தியாகிய குறிக்கு நெறியாக அமைகின்றது. ஆனால் பக்தியின் குறியும் நெறியும் ஒன்றுபட்டுத் திகழ்கின்றது.

வாழ்க்கையில் வறுமை வாட்டுகிறது, நோய் துயரம் செய்கிறது, வயதின் மூப்பு முதுமைத் தன்மையைத் தருகின்றது, மரணம் அச்சுறுத்துகிறது. உண்மைதான், ஆனால் அதற்காக ஒதுங்குவதோ ஓடுவதோ கூடாது. நிற்போம் நினைப்போம். இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம். இன்பமும் துன்பமும் இறையருளே. தீமை, நன்மை முழுவதும் அவன் செயலே, வறுமையும் செல்வமும் அவன் இன்னருளே, நோயைத் தருவதும் நோயை நீக்கி நம்மை ஆட் கொள்வதும் அவன் கடமையே. இன்று முதற்கொண்டு இறைவனை வழிபட்டால் அவர் நம்மிடம் வந்து காத்து அருள்வான். அவனுடைய திருவடி நிழலில் உயிர்கள் இன்பம் அடையும் என்பதே அவர்களின் நம்பிக்கை. இந்த நம்பிக்கைதான் பக்திநெறி எனப்படும்.

பக்தியின் வகைகள்

"பக்தியின் வகைகளைப் பதினொன்றாகக் குறிக்கின்றது நாரத பக்தி சூத்திரம். அவை கீழ்க்கண்டவாறு அமையும்.

1. இறைவனின் குணங்களில் பக்தி
2. இறைவனின் எழில் உருவத்தில் பக்தி
3. பூஜையில் பக்தி
4. அவனை நினைப்பதில் பக்தி
5. பகவத் சேவையில் பக்தி
6. அவனைத் தோழனாகக் கருதுவதில் பக்தி
7. அவனை தன் செல்வனாகக் கருதுவதில் பக்தி
8. தலைவி தன் தலைவனை நேசிப்பது போல பகவானை நேசித்துப் பக்தி பண்ணுதல்
9. சீவாத்மனைப் பரமாத் மனுபவத்தில் படைத்தல் என்னும் பாங்கில் பக்தி செய்தல்
10. பரமாத்மனைச் சோரம் பாவனைப் பன்னுதல் என்னும் பக்தி
11. இறைவனை விட்டுப் பிரிதலின் வருகின்ற வேதனையைக் குறித்துப் பக்தி செய்தல்".[4]

இப்பதினொரு வகைகளில் மட்டுமே பக்தி அமையும் என்று கூற இயலாது. முறையாக ஆராய்ந்து பார்க்குமிடத்து எத்தனையோ வகையான பக்தி முறைகள் கொள்ளத்தக்கன. சூரபதுமன் முதலானோர் இறைவனையே எதிர்த்து எப்போதும் இறை சிந்தையைத் தன் மனத்தில் கொண்டிருந்தனர். நாயன்மார்களில் ஒவ்வொருவரும் செலுத்திய பக்தி வெவ்வேறு வகையானது. அவையாவும் மேற்கண்ட வகைகளில் குறிக்கப் பெறவில்லை. பக்தி செலுத்துவார்க்குத் தக்க பக்தியின் வகைகளும் பெருகுகின்றன.

வைணவத்தில் பக்தி நெறி என்பது விரதம், தவம், தியானம், பிராணாயாமம் எனும் மூச்சுப்பயிற்சி ஆகியவற்றையெல்லாம் உட்கொண்டது. இந்த நெறி எல்லாராலும் பின்பற்ற முடியாது. எனவே வைணவம் பிரபத்தி நெறி என்ற ஒன்றை வகுத்துத் தந்தது. பிரபத்தி என்றால் சிறந்த பக்தி என்பது பொருள். இந்த நெறிக்குக் கட்டுப்பாடுகள் இல்லை. நீராடுதல், மந்திரம் சொல்லுதல் போன்றவையெல்லாம் பிரபத்தி நெறியில் இல்லை.

வைணவ முப்பொருள்

வைணவ தத்துவங்களில் மூன்று அடிப்படைக் கருத்துகள் அமைந்துள்ளன. அவை தத்துவம், இதம், புருஷார்த்தம் என்பனவாகும். இவை துவைதம், அத்துவைதம், விசிஷ்டாத்வைதம் என்ற தத்துவங்களுக்கு முற்பட்ட பழமை உடையவை. இவற்றுள் தத்துவம் என்பது மூன்றாக அமைவது. சித்து, அசித்து, ஈசுவரன் ஆகியன கொண்டது. இதனை தத்துவத்திரயம் என்பர்.

இதம் என்பது வீடுபேற்றிற்காகக் கடைபிடிக்கப்படும் வழியாகும். இது இருவகைப்படும். பக்தி, பிரபக்தி என்பன அவையிரண்டும் ஆகும்.

பெரியாழ்வார் பாசுரங்களில் பக்தி

பக்தியின் வகைகள் பலவற்றாலும் பெரியாழ்வார் திருமாலிடம் பக்தியைக் காட்டுகின்றார். அவருடைய பக்திச்சிறப்பு மற்றவர்க்கு வழிகாட்டியாக அமைகிறது. நாரத பக்தி சூத்திரம் கூறும் பக்தி வகைகள் பலவற்றை ஆழ்வார் கொள்கின்றார் என்பது அவருடைய பாசுரங்கள் வழி இனிது விளங்கும். இறைவனின் குணங்களின் மேல் கொண்ட பக்தியின் காரணமாக வெவ்வேறு பதிகளில் எழுந்தருளியுள்ள இறைவனைப் பாடுகின்றார். கண்ணனைத் தன் பாலகனாய் எண்ணி ஆழ்வார் அமைக்கும் பாசுரங்களும் அவருடைய பக்தி வெளிப்பாட்டைக் காட்டுவன. இவையன்றிப் பூசையில் பக்தியும் பகவத் சேவையில் பக்தியும் அவருடைய வரலாறு காட்டும் சான்றுகள். இவ்வாறு ஆழ்வாரின் பாசுரங்கள் அனைத்துமே பக்தியின் விளக்கமாக அமைகின்றன. அவற்றில் அகத்துறைப் பாங்கிலமைந்த பக்தியும் இறைவன் திருநாமத்தில் கொண்ட ஈடுபாடும், அடியவரிடம் அவர் கொண்ட பக்திச் சிறப்பும் ஈண்டு இடம் பெறுகின்றன. திருமாலிடம் கொண்டுள்ள பக்தியால் கிடைக்கப்பெறும் பயன் திருப்பல்லாண்டில் உரைக்கப் பெறுகின்றது. அதனை,

> **“நெய்யிடை நல்லதோர் சோறும், நியதமும், அத்தாணிச் சேவகமும்**
> **கையடைக் காயும், கழுத்துக்குப் பூணொடு, காதுக்குக் குண்டலமும்,**
> **மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து, என்னை வெள்ளுயிராக்கவல்ல**
> **பையுடை நாகப்பகைக் கொடியானுக்குப் பல்லாண்டு கூறுவனே!”**[5]

இந்த மனிதப் பிறவிக்குக் காரணமாக இருப்பவன் திருமால். இப்பிறவிக்கு அவனிடம் பக்தி செலுத்துவது ஒன்றே இப்பிறவியின் பயன். பக்திக்கு உண்டான பயனை இப்பிறவியிலேயே கொடுத்து விடுகின்றான் திருமால். அவனை தன்னுடைய மனத்தினாலும், வாக்கினாலும், மெய்யாலும் வணங்க பெறுவதே சிறந்த பக்தியாகும். உண்பதற்கு 'நல்லதொரு சோறு', 'அத்தாணிச் சேவகம்', 'காதிற்குக் குண்டலம்', 'கழுத்துக்குப் பூண்' இவை இறைவனால் இம்மெய்க்கு அளிக்கப் பெறுவன.

திருக்கோட்டியூரில் எழுந்தருளியுள்ள எம்பெருமானை வழிபடும் பக்தர்களைக் காணும்போதெல்லாம் என் தலைவனாகிய திருமாலையே காண்பது போலக் கருதி, பக்தர்கள் எல்லாம் இறைவனுடைய அடையாளங்கள் என்று உணர்ந்து அவர்களைத் தொழ வேண்டும் என்று நான் நெடுநாட்களாகக் கொண்டிருந்த ஆசையைத் தீர பெறுவேன் என்கிறார் பெரியாழ்வார்.

"கொம்பின் ஆர்பொழில் வாய்க்குயிலினம்
கோவிந்தன் குணம்பாடு சீர்ச்
செம்பொன் ஆர் மதில்சூழ் செழுங்
கழனியுடைத் திருக்கோட்டியூர்
நம்பனை, நரசிங்கனை நவின்று
ஏத்துவார்களைக் கண்டக்கால்,
எம்பிரான் தன சின்னங்கள் இவர் இவர்
என்று ஆசைகள் தீர்வனே"[6]

பக்தர்களை அதாவது இறைவனின் அடியவர்களைக் கண்டு தொழுவது இறைவனைக் கண்டு தொழுவதைக் காட்டிலும் சிறப்புடையது என்பது அதன் கருத்தாகும். இவ்வாறு பெரியாழ்வார் தம்முடைய பக்தியின் வெளிப்பாட்டை இறைவனின் அடியார்களை வணங்குவதன் மூலம் காணலாம்.

பிரபக்தி நெறி

பிரபக்தி நெறி என்பது உயிர்கள் தாமாக முன்வந்து தம்மைப் பரம்பொருளிடம் அடைக்கலப்படுத்திக் கொள்ளும் நிலை ஆகும். இதுவே சரணாகதி நெறியாகும். எல்லோரும் எளிதாக அநுட்டிக்கக் கூடியது. சுக்கிரீவன், வீடணன், காகம் (காகாசுரன்) போன்றோர் இந்நெறியைக் கடைபிடித்தே உயர்ந்தவர்கள். இந்தப் பிரபக்தி நெறியை உபதேசித்தவர் நம்மாழ்வார். இவரைப் பிரபந்த ஜன கூடஸ்தர் என்று வழங்குவதும் உண்டு. பிரபக்தி நெறியைக் கடைபிடிக்கும் வைணவர்கள் யாவர்க்கும் தலைவர் என்பது இதன் பொருள். திருமங்கை ஆழ்வார் கடைப்பிடித்த நெறியும் இதுவே.

இக்கருத்தின்வழி வைணவ சம்பிரதாயங்களில் சரணாகதி என்பது முக்கியமானது. அனைவராலும் எளிமைபடக் கைக்கொள்ளத்தக்கது என்பது தெரியவருகிறது. எனவே உயிர்கள் அனைத்தும் சரணாகதியாக ஆண்டவனைப் பெற்றால் கடைத்தேறுவது எளிது என்பது உறுதியாகின்றது.

திருமாலிருஞ்சோலையிலே எழுந்தருளப்பெற்ற திருமாலை வேறிடத்திற்குப் போக விடமாட்டேன் என்றும் என் உள்ளமெல்லாம் உன்னை அடைந்து உன் திருவடிகளிலே சரணடைந்து வாழ முனைவதாக,

"காலும் எழா; கண்ண நீரும் நில்லா; உடல்
சோர்ந்து நடுங்கிக் குரல்
மேலும் எழா; மயிர்க்கூச்சும் அறா; என்
தோள்களும் வீழ்வு ஒழியா;
மால் உகளா நிற்கும் என் மனனே! உன்னை
வாழத் தலைப்பெயதிட் டேன்;
சேல் உகளா நிற்கும் நீள்சுனை சூழ்
திருமாலிருஞ்சோலை எந்தாய்!"[7]

என்று தன்னுடைய அன்பின் மிகுதியால் அவர் எழ முயன்றாலும் கால்கள் இருந்த இடத்தை விட்டுப் பெயர மறுக்கின்றன என்கின்றார். இவ்வன்பின் மிகுதியால் கண்களில் நிறைந்திருக்கின்ற கண்ணீர் அங்கே தங்காமல் பெருகி வழிகின்றன. அவருடைய உள்ளம் நடுக்கமுற்று உடம்பெல்லாம் மயிர்கூச்செறிகின்றது. இவ்வாறாக இறைவனே அடைக்கலம் என்று சரணடைகிறார்.

பாரதப் போராகிய குருசேத்திரப் போரில் உன் தங்கையின் கணவனான அர்சுனனோடு உனது அத்தை மக்களான பஞ்ச பாண்டவர்களுக்கு அரசாட்சியை நல்கி அவர்களைச் சுகமாக வாழ வைத்தாய். இன்று நான் பல ஊழிக் காலங்களாக சம்சாரம் எனும் பந்தத்தில் சிக்கி உழன்று விட்டேன். இப்பொழுது நீ யார் என்பதையும், எனக்கு நீ ஒருவன் தான் வீடு பேறு அருளும் தன்மையுடையவன் என்பதையும் நன்றாகப் புரிந்து கொண்டேன் என்பதனை,

"எத்தனை காலமும் எத்தனை ஊழியும்
இன்றொடு நாளையென்றே
இத்தனை காலமும் போய் கிறிப்பட்டேன்; இனி
உன்னைப் போகலொட்டேன்
மைத்துனன்மார்களை வாழ்வித்து, மாற்றலர்
நூற்றுவரைக் கெடுத்தாய்|
சித்தம் நின்பாலது அறிதி அன்றே!
திருமாலிருஞ்சோலை எந்தாய்!"[8]

இவ்வாறு பெரியாழ்வார் தன்னுடைய புத்தி, சித்தம், உள்ளம், ஆன்மா அனைத்தையும் உன்னிடத்தில் அடைக்கலமாகக் கொண்டு சரணடைவதை மேற்கண்ட பாசுரத்தின் மூலம் அறியமுடிகின்றது.

முடிவுரை

இறைவன் மீது பக்தி செலுத்தும் முறையையும், ஆழ்வார் செலுத்திய முறையையும் அவ்வாறு செய்து அருள் பெற்றோரின் அனுபவத்தினைக் கொண்டு பக்தி செலுத்தியதை அடியொற்றி வீடுபேறு எனும் பெரும்பேற்றை அடைய வழிவகுக்கும் நிலையில் இக்கட்டுரை அமைந்திருக்கிறது எனலாம்.

அடிக்குறிப்புகள்

1. சுந்தரர் தேவாரம், ப.251
2. திருநாவுக்கரசர் தேவாரம், ப.896
3. நம்மாழ்வார் திருமொழி, ப.2675
4. பெரியாழ்வார் திருமொழி, ப.8
5. பெரியாழ்வார் திருமொழி, ப.368
6. பெரியாழ்வார் திருமொழி, ப.457
7. பெரியாழ்வார் திருமொழி, ப.460

துணைநூற்பட்டியல்

1. எம். நாராயணவேலுப்பிள்ளை, பன்னிரு திருமுறை, பாகம்-10, வர்த்தமான பதிப்பகம், 1995.
2. வி.டி. இராமசுப்பிரமணியன், பன்னிரு திருமுறை, பாகம்-8, வர்த்தமான பதிப்பகம், 1995.
3. பள்ளத்தூர் பி.எல். பழனியப்பன், நாலாயிரத் திவ்ய பிரபந்தம், பெரியாழ்வார், திருவரசு புத்தக நிலையம், 2019.
4. முனைவர் ஆர்.வி. கமலக்கண்ணன், நாலாயிர திவ்ய பிரபந்தம், வர்த்தமான பதிப்பகம், 2001.

REFERENCES

1. M. Narayanavelupillai, Panniru Thirumuraigal, Part - 10, Varthaman Pathippagam, 1995.
2. V.T. Ramsubramaniyan, Panniru Thirumuraigal, Part - 08, Varthaman Pathippagam, 1995.
3. Pallathur PL. Palaniappan, Naalayira Divya Prabhandam Periyalwar, Thiruvarasu Puthaga Nilayam, 2019.
4. Dr.R.V. Kamalakkannan, Naalayira Divya Prabhandam, Varthaman Pathippagam, 2001.